மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்குமாகாணம்

Provincial Department of Education – Northern Province

மூன்றாந் தவணைப் பரீட்சை 2025

தரம் :- 9	கர்நாடக சங்கீதம் பகுதி I , II	நேரம் - 2மணித்தியாலங்கள் சுட்டெண் .....

பகுதி I

- பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடை தருக. பகுதி II இல் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. மூன்று அங்கங்களையும் எடுத்துக் கொள்ளும் தாளம்
1. மட்டியதாளம் 2. திரிபுடைதாளம் 3. ஐம்பை தாளம் 4. ஆதி தாளம்

02. வா சரவணனே எனும் கீர்த்தனை இயற்றியவர்
1. தஞ்சை க. பொன்னையா பிள்ளை 2. T.V பிச்சையப்பா
3. தியாகராஜ சுவாமி 4. ஸ்வாதித் திருநாள் மகாராஜா

03. ஜதிக் கோர்வைகளைக் கொண்ட மெட்டுக்களால் அமைக்கப்பட்ட உருப்படி
1. கீர்த்தனை 2. வர்ணம் 3. கீதம் 4. ஜதீஸ்வரம்

04. ஹிந்துஸ்தானி இசையில் பிலாவல் என அழைக்கப்படும் இராகம்
1. மாயாமாளவ கௌளை 2. சங்கராபரணம்
3. சுத்தசாவேரி 4. மோகனம்

05. தம்புராவின் நாதம் "கணீர்" என கேட்பதற்கு உதவுவது எது?
1. ஜீவாளி 2. குடம் 3. பிரடை 4. தண்டி

06. மத்தளம் என்ற இசைக்கருவியை இசைப்பவர்
1. நாரதர் 2. தும்புரு 3. நந்தி 4. கிருஸ்ணர்

07. "வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க கொட்டி இசைந்திடுமோர் கூட்டமுத பாட்டு" என்னும் பாடல் வரிகளை இயற்றியவர்
1. பாபநாசம் சிவன் 2. தஞ்சைக.பொன்னையாபிள்ளை
3. பொன் ஸ்ரீ வாமதேவன் 3. சுப்பிரமணியபாரதியார்

08. நவகோடி நாராயணன் என புகழ்பெற்றவர்
1. தியாகராஜ சுவாமிகள் 2. புரந்தரதாஸர்
3. பாபநாசம்சிவன் 4. தஞ்சை க.பொன்னையாப்பிள்ளை

09. ஸமகரி/ ஸரி/ கமா// என்ற அமைப்பினை உடைய அப்பியாச வரிசை
1. ஸ்வர வரிசை 2. ஜண்டை வரிசை 3. தாட்டு வரிசை 4. அலங்காரம்

Past Papers Wiki

10. ஸ்வர ஜதியில் இடம் பெறும் அங்கங்கள்
    1. பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்
    2. பல்லவி, அனுபல்லவி, சரணம்
    3. அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம்
    4. சரணம், சரணஸ்வரங்கள், பல்லவி

11. "ஏலரா நீ தாயே இந்தைன ராதயா" எனும் முதலாவது சரணத்தைக் கொண்ட ஒரு உருப்படி வகை எது?
    1. கீர்த்தனை 2. திவ்ய நாம கீர்த்தனை 3. கீதம் 4. தேவாரம்

12. தேவதேவ கலையானதே எனும் பாடலின் இராகம் யாது?
    1. மோகனம் 2. மாயாமாளவகௌளை 3. பிலஹரி 4. கமாஸ்

13. ஆரபி இராகத்தைக் குறிக்கும் பண்
    1. பழந்தக்க இராகம் 2. புறநீர்மை 3. முல்லை 4. தக்கேசி

14. பின்வருவனவற்றுள் நாட்டுப் பாடல் வகையைச் சார்ந்தது
    1. தேவாரம் 2. திருவாசகம் 3. காவடிச்சிந்து 4. கீர்த்தனை

15. மாது எனப்படுவது
    1. ஸ்வரம் 2. ஸாகித்தியம் 3. ஜதிக்கோர்வைகள் 4. சிட்டை ஸ்வரம்

16. ஹிந்துஸ்தான் இசையில் பைரவி தாட் என அழைக்கப்படுவது
    1. மாயாமாளவகௌளை 2. மோகனம் 3. ஹரிகாம்போதி 4. சங்கராபரணம்

17. மங்கள வாத்தியங்களாவன
    1. புல்லாங்குழல், நாதஸ்வரம் 2. தவில், மிருதங்கம்
    3. நாதஸ்வரம், தம்புரா 4. தவில், நாதஸ்வரம்

18. 1_30 1_31_3 இவ் அடையாளம் குறிக்கும் தாளம்
    1. சதுஸ்ர ஜாதி மட்டியதாளம் 2. சதுஸ்ர ஜாதி துருவதாளம்
    3. கண்ட ஜாதி அடதாளம் 4. திஸ்ரஜாதி திரிபுடைதாளம்

19. இசை நாடகப் பாடலுக்கு பொருத்தமான கருப்பொருள்
    1. சிறுகதைகள் 2. துப்பறியும் கதைகள்
    3. இலக்கிய நாவல் 4. புராணக் கதைகள்

20. "காலனிடத் தணுகாதே" என்னும் திருப்புகழ் அமைந்துள்ள தாளம்
    1. கண்டசாபு 2. ஆதி 3. மிஸ்ர சாபு 4. சங்கீர்ணசாபு

(20*2 =40 புள்ளிகள்)

பகுதி II

- பகுதி II இல் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01)

1. ஸப்த என்பதன் பொருள் யாது?

2. திரியாங்கங்கள் எவை?

3. ஸப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும் மொத்த அட்சரங்களையும் குறிப்பிட்டு அட்டவணைப்படுத்துக?

02)

1. சங்கராபரண இராகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
   1) தாய் இராகம்
   2) ஆரோகணம்
      அவரோகணம்
   3) ஸ்வரஸ்தானங்கள்
   4) ஹிந்துஸ்தான் பெயர்
   5) மேலைத்திய இசைப்பெயர்
   6) பண்
   7) இந்த இராகத்தின் விசேடமாக பாடப்படும் உருப்படி
   8) இந்த இராகத்தின் சிறப்புகள்
      I. .....
      II. .....
      III. .....
   9) இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகள்
   10) சாதி வாத்தியங்களில் வாத்தியங்களில் சிறந்தது எது?

03)

1. சுருதி வாத்தியங்களில் சிறந்தது எது?
2. இவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக?
3. இவ்வாக்கியம் சுருதி சேர்க்கும் முறையை எழுதுக?
4. நன்றாக சுருதி நன்றாக சுருதி சேர்க்கப்பட்ட இவ்வாதியத்தில் ஒலிக்கும் ஸ்வரங்கள் எவை?
5. இவ்வாத்தியம் வாசிக்கும் முறையை எழுதுக?

04) பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாற்றினை பின்வரும் விடயங்களை கருத்திற் கொண்டு எழுதுக?

1. வாழ்க்கைக் காலம்
2. பெற்றோர் பெயர்
3. இளமைப் பெயர்
4. முதன் முதலில் பாடிய உருப்படி இராகம் என்பவற்றை எழுதுக?

PAST PAPERS WIKI

Past Papers Wiki

5. இவர் பெற்ற பட்டங்கள், பட்டங்களை வழங்கியோர் , பட்டங்கள் பெற்று ஆண்டு ஐந்தினைக் குறிப்பிடுக?

I. ..... , ... , ...

II. ..... , ... , ...

III. ..... , ... , ...

IV. ..... , ... , ...

V. ..... , ... , ...

6. இவர் இயற்றிய பிரபல்யமான உருப்படிகள் மற்றும் இராகங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

I. ..... , ...

II. ..... , ...

III. ..... , ...

IV. ..... , ...

V. ..... , ...

7. இவரது முத்திரை யாது?

8. இவர் இறந்த ஆண்டு எது?

05) பின்வரும் உருப்படிகள் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக?

(இயற்றியவர் பெயர் , உதாரணம் என்பன குறிப்பிடப்பட வேண்டும்)

I. கீர்த்தனை

II. ஜதீஸ்வரம்

III. ஸ்வர ஜதி

06) பின்வருவனவற்றில் விரும்பிய மூன்றினைத் தெரிவு செய்து ஒவ்வொன்றிற்கும் 05 வாக்கியங்கள் தருக?

I. கும்மி

II. கோலாட்டம்

III. கொம்பு முறிவு

IV. ஊஞ்சல்

***

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library